



கோவை மாநகர் மாவட்ட திமுக சார்பில், சித்தாபுதூர் வி.கே.கே.மேனன் சாலையில் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் தலைமை தாங்கி, கண்டன உரை ஆற்றினார். முன்னாள் அமைச்சர்,கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம், முனைவர்.கணபதி ராஜ்குமார் எம்.பி. ஆகியோர் கண்டன உரை ஆற்றினார்கள். மாநகர் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர், முருகன் ஆகியோர் முன்னிலையில், பீளமேடு பகுதி2 மா.நாகராஜ் வரவேற்புரையில் நடைபெற்ற இக்கண்டன கூட்டத்தில், தலைமைக் கழக நிர்வாகிகள் பி. நாச்சிமுத்து, வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி,அ. தமிழ்மறை, நா. முருகவேல், LPF.தமிழ் செல்வன். மேயர் K.ரங்கநாயகி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வே.பாலசுப்ரமணியன், P.ஆனந்தகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.இறுதியில் 48 வது வட்டக் கழகச் செயலாளர் மு.சசிகுமார் நன்றி கூறினார்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து அறந்தாங்கியில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - முனைவர். பொன்னேரி சிவா - குடியாத்தம் புவியரசி கண்டன உரை!

புதுக்கோட்டை. பிப் 11 -

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக சார்பில் நடைபெற்ற மத்திய பட்ஜெட்டில் நிதி ஒதுக்காமல் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மத்தியஅரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது.

நகர கழக செயலாளர் ராஜேந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிர மணியன் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சரும்,புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான எஸ்.ரகுபதி கண்டன உரையாற்றினார். கண்டன உரை நிகழ்த்திய அமைச்சர் எஸ். ரகுபதி, தமிழ்நாட்டிற்கு கேட்ட திட்டங்கள் எதுவுமே கிடைக்கவில்லை. பீகாரில் தேர்தல் வருது என்பதற்காக 5 .திட்டங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது. அங்கு நிதீஷ் குமாரும் ஓட்டு வாங்க மாட்டார், பா.ஜ.க.வும் ஓட்டு வாங்க முடியாது. அடுத்த தேர்தலில் இந்தியா முழுவதும் தமிழக முதல்வர் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மோடி ஆட்சியை அகற்றி வீட்டிற்கு அனுப்புவார். அறுபடை வீடும் முருக பெருமானும் தமிழ் கடவுள்தான். ஆகவே அண்ணாமலை எதற்குமே சொந்தம் கொண்டாட முடியாது. பக்தி என்ற பகல் வேசத்தால் தமிழகத்தை ஏமாற்ற முடியாது. தமிழக மக்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல. அவர்கள் பழனிக்கும் பாத யாத்திரை செல்வார்கள். திராவிட மாடல் ஆட்சிக்கு வாழ்த்துக்களும் சொல்வார்கள். அதுதான் தமிழ் நாடு அதுதான் தமிழகம். அதை இந்தியா உணர்ந்து இருக்கிறது. பாஜக உணரவில்லை என பேசினார்.

கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் பொன்னேரி சிவா, குடியாத்தம் புவியரசி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.. கூட்டத்தில் திமுக தீர்மானக் குழு உறுப்பினர் சி.ராமநாதன், முன்னாள் சட்டப் போவை உறுப்பினர் உதயம் சண்முகம், திமுக தேர்தல் பணிக் குழு செயலாளர் பரணி கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.ஆர்.கே.கலைமணி, இரா.ஆனந்த், மாவட்ட துணைச் செயலாளர்கள் அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாதுரை,

ஒன்றிய செயலாளர்கள் சக்தி ராமசாமி, எஸ்.எம். சீனியார் , வே.பொன் துரை, பொன். கணேசன், அழகு என்ற சிதம்பரம், கே.பி.கே. டி.தங்கமணி, வி.ஆர்.இளையராஜா, குமார் என்ற துரைக் கண்ணு, கே.எஸ்.ரவி, அரு. வடிவேலு, தலைமைச், முன்னாள் நகர் மன்ற தலைவர் மாரியப்பன், முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், நகர மன்ற துணைத் தலைவர் தி.முத்து, கீரமங்கலம் நகரச் செயலாளர் கே.சி.சிவக்குமார்,

மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் விமலாதிராஜன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.ஆர். ராமசாமி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பாத்திமா பீவி, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு ப பேரவை அமைப்பாளர் இரா.மேகநாதன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தேவி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ரம்யா பாலு, மாவட்ட நெசவாளர் அணி தலைவர் பழனியப்பன், அறந்தாங்கி தொகுதி ஒருங்கிணைப்பாளர் செந்தில்வேலன், திருமயம் தொகுதி ஒருங்கிணைப்பாளர் சுரேந்திரன், சிவகுமார், மாநில, மாவட்ட, ஒன்றிய நகர நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், .துணை அமைப்பாளர்கள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன் நன்றி கூறினார்.

### மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில்

# மல்லசமுத்திரம் பேரூராட்சி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## திருமலை முன்னிலை! பி.எஸ்.சீனிவாசன்– மல்லை ஜெகதீஸ் பங்கேற்பு

நாமக்கல், பிப். 11 -

நாமக்கல் மேற்கு மாவட்டம் - மல்லசமுத்திரம் பேரூராட்சிக்கு உட்பட்ட பாக முகவர்கள் கூட்டம் பேரூர் கழகச் செயலாளர் திருமலை முன்னிலையில், மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் தலைமையில் நடைபெற்றது. 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைகளை மக்களிடத்தில் எடுத்து கூறி கழக வெற்றிக்கு எவ்வாறு பணியாற்ற வேண்டும் என உரையாற்றினார்.

மேலும் திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் பி.எஸ்.சீனிவாசன் கலந்து கொண்டு பாக முகவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். நிறைவில் பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் ஜெகதீஸ் நன்றியுரை வழங்கினார்.

இந்நிகழ்வில் அவைத் தலைவர் வடிவேல், வார்டு செயலாளர்கள் டி.எம்.முருகேசன், டி.ஏ.முருகேசன், கலைமணி, மருதாச்சலம், தங்கராசு, மூர்த்தி, சண்முக சுந்தரம், குமரவேல், மெய்யழகன், ராஜசேகர், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் ரமேஷ், மல்லை.ஜெகதிஷ் குமார், கருணாகரன், சாதிக் பாட்ஷா, மானாசெல்வம், நாச்சிமுத்து, முரளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பென்னாகரம் பேருந்து நிலையம் அருகில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் மோடி அரசுக்கு எதிரான கண்டன பொதுக் கூட்டத்தில் தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி மற்றும் கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் குத்தாலம் அன்பழகன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.கூட்டத்தில் முன்னாள் மாவட்ட செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன்,மற்றும் மாநில,மாவட்ட,ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள்,பொதுக்குழு உறுப்பினர்கள்,அணிகளின்அமைப்பாளர்கள்,துணைஅமைப்பாளர்கள்,BLA2,கிளைகழகநிர்வாகிகள்உள்ளிட்டகழகத்தினர்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




கோவை ஸ்ரீ கிருஷ்ணா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற கோவை மாவட்ட நிர்வாகம், கோவை மாநகர காவல் துறை மற்றும் உயிர் தன்னார்வ தொண்டு நிறுவனம் இணைந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வுக்காக நடத்திய, ‘உயிர் சாலை பாதுகாப்பு ஹேக்கத்தான் 2025ல் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பரிசுகளை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், துணைமேயர் வெற்றிசெல்வன், தலைமைசெயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், உயிர் தொண்டு நிறுவன நிர்வாக அறங்காவலர் மருத்துவர் S. ராஜசேகரன், கோவை ஸ்ரீ கிருஷ்ணா பொறியியல் கல்லூரி தலைவர் மலர்விழி பூங்காஇராஜேந்திரன் வி.ஜி.கோகுல், தளபதி தியாகு ,கரும்புக்கடை சாதிக் ,ஜாஹீர் ,ஸ்பார்க் மணி,இளைஞரணி மனோஜ், ஆகியோர் கலந்துகொண்டனர்.

### யாருடன் கூட்டணி அமைத்தாலும் ஒரு போதும் பா.ஜ.க. வெற்றி பெற முடியாது!

# தமிழ்நாட்டில் அனைத்துத் தேர்தல்களிலும் தி.மு.க.தான் வெற்றி பெறும்!

## திருச்சி பொதுக் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

திருச்சி பிப்.11-

ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்படுவதை கண்டித்து தமிழகம் முழுவதும் தி.மு.க சார்பில் கண்டன பொதுக்கூட்டம் நடத்தப்படும் என தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி திருச்சி புத்தூர் நால் ரோடு பகுதியில் தி.மு.க. மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய அரசின் பட்ஜெட்டை கண்டித்து பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமையில் நடைபெற்றது. மாநகரசெயலாளர் மேயர் அன்பழகன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தி.மு.க. துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில் தலைமைக் கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு பேசியதாவது:-

ஆ.ராசா எம்.பி. பல்வேறு இன்னல்களை கடந்து வந்துள்ளார். இன்று அவர் பல உயரங்களுக்குச் சென்றுள்ளார். அவரின் வளர்ச்சிக்கு நானும் ஒரு அணிலாக இருந்துள்ளேன் என்பது பெருமையாக உள்ளது.

தி.மு.க.வை வெற்றி கொள்ள முடியாததால் தி.மு.க.வை கண்டாலே ஒன்றிய அரசு வெறுப்பாக இருக்கிறார்கள்.

**நிதி ஒதுக்காத ஒன்றிய அரசு!**

பட்ஜெட்டில் தமிழகத்திற்கு ஒன்றிய அரசு ஒரு ரூபாய் கூட ஒதுக்கவில்லை. தமிழ்நாடு பேரிடரால் பாதிக்கப்பட்ட போதும் அதற்காக கேட்ட நிதியையும் ஒதுக்கவில்லை.

கல்விக்கும் ஒதுக்க வேண்டிய நிதியையும் ஒதுக்காமல் இருக்கிறார்கள்.

பா.ஜ.க எத்தனை முயற்சி எடுத்தாலும் யாருடன் கூட்டணி அமைத்து வந்தாலும் ஒரு போதும் அவர்களால் வெற்றி பெற முடியாது. தமிழ்நாட்டில் அனைத்துத் தேர்தல்களிலும் திமுக தான் வெற்றி பெறும் .



இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

**ஆ.இராசா எம்.பி. பேச்சு!**

திமுக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. பேசியதாவது:-

நான் உயரத்திற்கு செல்ல அணிலாக இருந்தேன் என அமைச்சர் கே.என்.நேரு குறிப்பிட்டார். அவர் அணில் அல்ல, எனக்கு ஆதார சுருதியே அவர்தான்.

நான் நாடாளுமன்றத்தில், ஐ.நா. மன்றத்தில் பேசியுள்ளேன் என நேரு குறிப்பிட்டார்.பறவை எவ்வளவு உயரத்தில் பறந்தாலும் அதன் கூடு தரையில் இருப்பதை பறவை மறக்காதோ அதே போல் தான் நான் எவ்வளவு உயர பறந்தாலும் கே.என்.நேருவை எப்போதும் மறக்க மாட்டேன் என கூறி தன் உரையை தொடங்கினார்.

2014 ஆம் ஆண்டு மோடி அரசு ஆட்சிக்கு வந்த பின் தொடர்ந்து அவர்கள் தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறார்கள்.

இந்தியாவில் ஒருமைப்பாடு வேண்டும் என தான் தி.மு.க. எப்போதும் விரும்புகிறது.

இந்திய துணை கண்டத்தில் வேற்றுமையில் ஒற்றுமையை தான் நேரு, அம்பேத்கர் உள்ளிட்ட தலைவர்கள் விரும்பினர். அதன் அடிப்படையில் தான் அரசியலமைப்பு சட்டம் உருவாக்கப்பட்டது.

நாடுகளின் கூட்டமைப்பின் துணை கண்டம் தான் இந்தியா என்பதை அப்போதைய தலைவர்கள் புரிந்து கொண்டார்கள்.

பாகிஸ்தான் படையெடுத்து வந்த போது இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்காக ரூ.100 கோடி வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். நம்மை பார்த்து பிரிவினைவாதிகள் என்கிறார்கள்.

தேசிய உணர்வை தமிழ்நாட்டிற்கு போதிக்கும் அருகதை மோடி, அமித்ஷா, நட்டா உள்ளிட்ட யாருக்கும் இல்லை.

பேரிடர் தொடர்பாக தமிழகத்திற்கு ஆய்வு செய்ய வந்த ஒன்றிய குழு ரூ. 45 ஆயிரம் கோடி தமிழகம் கேட்பது நியாயம் தான் என ஒப்புக்கொண்டது. ஆனாலும் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கவில்லை.

அவர்கள் தமிழகத்திற்கு நிதி ஒதுக்காததற்கு காரணம் அவர்களால் இங்கு ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியாததுதான்.

ரூ.6 லட்சத்து 23 கோடி நேரடி வரி கட்டும் தமிழகத்திற்கு ரூ.58,000 கோடி தான் ஒதுக்குகிறார்கள் ஆனால் உத்திர பிரதேசத்திற்கு ரூ.2லட்சத்து 87 ஆயிரம் கோடி ஒதுக்குகிறார்கள். தென் மாநிலங்களுக்கு ஒட்டுமொத்தமாக சேர்த்தே ரூ.2 லட்சம் கோடி தான் ஒதுக்கி உள்ளார்கள். இது குறித்து கேட்டால் நிர்மலா சீத்தாராமன் பதில் கூறுவதே இல்லை.

**பதிலளிக்காத பிரதமர்!**

மோடி, அரசு முறை பயணமாக சென்ற போது அதானியையும் அழைத்து சென்றார். அந்த அதானி தான் பங்குகளை பூதாகரப் படுத்தி கணக்குகளில் மோசடி செய்தார் என ஹிட்டன்பர்க் அறிக்கை வெளியிட்டது.

இது குறித்து கேள்வி கேட்டால் பதில் இல்லை.

ஒன்றிய அரசு கொண்டு வரும் அனைத்து திட்டங்களும் மேல் ஜாதிக்காரர்களுக்கும், முதலாளி களுக்குமான திட்டமாகதான் உள்ளது. பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்காக எந்த திட்டங்களையும் அவர்கள் கொண்டு வருவதில்லை.

**ஒன்றிய அரசுக்கு பாடம் புகட்டுவோம்!**

மு.க.ஸ்டாலினோ, உதயநிதி ஸ்டாலினோ ரத்த வழி வாரிசல்ல திராவிட கொள்கை வழி வாரிசுகள்.

மோடி அரசும் ஒன்றிய அரசு அதிகாரிகளும் தமிழ்நாட்டின் எம்.பிக்களை பார்த்து தான் அச்சப்படுகிறார்கள். அதற்கு காரணம் எங்கள் பின்னால் இருக்கும் பெரியார், அண்ணா, கலைஞர் என்னும் தத்துவம் தான். அந்த தத்துவத்தை வெல்ல திராணி இல்லாத காரணத்தால் தான் அவர்கள் நம்மிடம் மண்டியிடுகிறார்கள்.

நாம் ஒரு வேளை தவறி நம் கொள்கையை நீர்த்து போக செய்து நாம் அவர்களிடம் மண்டியிட வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள்.

ஆனால் நாம் மண்டியிடாத சுயமரியாதைக்காரர்கள் என்பதை நிரூபித்து ஆதிக்க சக்திகளை, மதவாத சக்திகளை முறியடிப்போம். தமிழ்நாட்டை புறக்கணிக்கின்ற ஒன்றிய அரசுக்கு பாடம் புகட்டுவோம் .

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த பொதுக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பழனியாண்டி, சௌந்தர பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் முத்து செல்வம்,முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் குடமுருட்டி சேகர்,மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் கிராப்பட்டி செல்வம், புத்தூர் தர்மராஜ்,ஒன்றிய செயலாளர்கள் மாத்தூர் கருப்பையா, அந்த நல்லூர் கதிர்வேல்,பகுதி செயலாளர்கள் மோகன்தாஸ், காஜா மலை விஜி ,கமால் முஸ்தபா, ராம்குமார்,மாநகரத் துணைச் செயலாளர் கவுன்சிலர் கலைச்செல்வி, திருச்சி மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி,மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பி.ஆர் சிங்காரம்,வர்த்தகர அணி தொழிலதிபர் ஜான்சன் குமார்,மாநகர அயலக அணி அமைப்பாளர் துபேல் அகமது,மாவட்ட பிரதிநிதிகள் வக்கீல் மணி வண்ண பாரதி, சோழன் சம்பத்,நிர்வாகிகள் வாமடம் சுரேஷ், அரவானூர் தர்மராஜன், அயூப்கான், இன்ஜினியர் நித்தியா னந்தம், சர்ச்சில் ரஜினி கிங், உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டனர்.

முடிவில் வட்டச் செயலாளர்கள் புத்தூர் பவுல் ராஜ், பிரேம்குமார் ஆகியோர் நன்றி கூறினர்.




கோவை தெற்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டம் சூலூர் அறிஞர் அண்ணா சீரணி கலையரங்கில் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் நடைபெற்றது கழக மாநில செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர், சூலூர் பேரூர் கழக செயலாளர் உரம் சு. கவுதமன் வரவேற்புரையில், சூலூர் பேரூராட்சி தலைவர் தேவி மன்னவன் முன்னிலையில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் மயூரா சுப்பிரமணியம், ப.க.சாமிநாதன்,ஈ.கா.சி.பொன்னுச்சாமி,ஜெயப்பிரகாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இருகூர் சந்திரன், மு க முத்து,ஏர்போர்ட் ராஜேந்தர்,எம்.அமுதபாரதி,ஒன்றியகழகசெயலாளர்கள்மன்னவன்,அன்பரசு,முத்துமாணிக்கம்,கே.கே.செந்தில்குமார்,விஜயசேகரன்,கிரி கதிர்வேல்,செ.ஆ.துரை,ராஜு,ரமேஷ்,யுவராஜ்,நகரகழகசெயலாளர்கள்நித்யாமனோகரன்,நவநீதகிருஷ்ணன்,குட்டிசுதாகர்,ராம்ஜிஉள்ளிட்ட கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.